**O.S**.362/2018

**எம்.சுப்பிரமணி DW**1

**நாள் :** 13.03.2020

சாட்சி இன்று ஆஜர். சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறார்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 2ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானவைதான். ஈஸ்வரி என்பவர் 30.05.2018 ம் தேதி இறந்துபோனார். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் 10 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். அது எனது சொந்த வீடுதான். நான் வசித்து வரும் பகுதி அம்மன் நகர். அந்த அம்மன் நகர் இடத்தை நானும், எனது மனைவியும் வாங்கி சைட் போட்டு விற்பனை செய்தோம் என்றால் இல்லை. இந்த வழக்கை யார் என்மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் என்மீது மகேஷ்வரன் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனது மனைவி ஈஸ்வரிக்கு நான், எனது மகன், மகள் ஆகியோர் சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரிதான். எனது மனைவி எஸ்.ஈஸ்வரி என்றுதான் கையெழுத்து செய்வார் என்றால் சரிதான். எனது மனைவி படிக்கவே இல்லை. எனது அப்பாவின் பெயர் முத்துசாமி என்றால் சரிதான்.

**வழக்கறிஞர் வேண்டுதலின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**